# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

## R.L.T.O.P. No. 3 of 2023

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | R. சரவணன் |
| **தந்தை பெயர்** | : | ராஜகோபால் |
| **வயது** | : | 60 |
| **தொழில்** | : | |
| **முகவரி** | : | |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 24.03.2026 அன்று **திரு. M. ராஜகுமரேசன், B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் 3–ம் நபர் ஆவேன். என்னை எதிர்மனுதாரர் சாட்சி 2 ஆக விசாரணை செய்யவும் எனது முதல் விசாரணையை பதிவு செய்யவும் ஆஜராகியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் படித்துக்காண்பிக்கப்பட்டது என்றும் சத்தியமாய் சொல்கிறேன்.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>**குறுக்கு விசாரணை:**</u>

1. ஏற்கனவே எதிர்மனுதாரர் தாக்கல் செய்த அசல் வழக்கு 32/2023 வழக்கில் நான் சாட்சியம் அளிக்க நீதிமன்றம் வந்துள்ளேன். அந்த வழக்கில் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் இருந்த சங்கதிகளை சொல்லி தான் இந்த மனுவிலும் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும்

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.24 14:25:31 +0530

வரவில்லை. எதிர்மனுதாரர் அழைத்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வழக்கு விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரமும் எனக்கு தெரியாது. நான் நகை ஆசாரியாக உள்ளேன். எனக்கு சொந்தமாக நகை கடை உள்ளது. RDS Jewellery என்ற பெயரில் கடை உள்ளது. நான் தான் அந்த கடைக்கு உரிமையாளர். கடைக்கு முறையாக வரி செலுத்துகிறேன். என் பெயரில் தான் உள்ளது.

2. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் Bank of Baroda வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணியில் இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வங்கியில் முழு நேர பணியாளராக தான் உள்ளேன். எனது நகை கடைக்கு நான் செல்லமாட்டேன். நான் 13 ஆண்டுகளாக மேற்படி வங்கியில் பணியில் உள்ளேன். அதற்கு முன்பு RDS Jewellery யில் வேலை பார்த்தேன். 1973ம் ஆண்டிலிருந்து எனது தாயார் பெயரில் அந்த கடை இருந்தது. என் பெயரில் சுமார் 15 ஆண்டுகளாக மேற்படி கடை உள்ளது. தற்போது தாமோதரன் என்பவருக்கு அந்த கடையை குத்தகைக்கு கொடுத்துள்ளேன். 6 வருடங்களாக அவர் அங்கு உள்ளார். அதற்கு எங்களுக்குள் எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் உள்ளது.

3. RDS Jewellery தாமோதரன் பெயரில் உள்ளது. கடை சொத்து எனது பெயரில் உள்ளது. அதற்கு முன்பு எனது தாயார் காலத்தில் GR Jewellery என்ற பெயரில் தொழில் செய்து வந்தோம். எனது பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி விவரங்கள் எதுவும் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போது இந்த வழக்கு கடை எண் 13 மற்றும் 14 நடக்கிறது. ே மற்படி 2 கடைகளும் மனுதாரருக்கு உரியது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கு இடையே எழுத்துபூர்வமாக வாடகை ஒப்பந்தம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. எந்த காலத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது, எவ்வளவு முன்பணம் கொடுக்கப்பட்டது, மற்றும் எவ்வளவு மாத வாடகை என்ற விவரமும் எனக்கு தெரியாது. ஒப்பந்த முடிவு தேதியும் எனக்கு தெரியாது.

4. எதிர் மனுதாரருக்கு முன்பு கடை எண் 13ல் அழகப்பா என்பவர் வாடகைக்கு இருந்தார். கடை எண் 14ல் துரைராஜ் என்பவர் வாடகைக்கு இருந்தார். அவர்கள் இருவரும் தற்போது உயிருடன் இல்லை. அவர்கள் இருவரும் எனக்கு உறவினர்கள் அல்ல. அவர்களுக்கும் மனுதாரர்களுக்கும் இடையே எழுத்துபூர்வமாக வாடகை ஒப்பந்தம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. எந்த

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.24 14:25:38 +0530

காலத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டது, எவ்வளவு முன்பணம் கொடுக்கப்பட்டது, மற்றும் எவ்வளவு மாத வாடகை என்ற விவரமும் எனக்கு தெரியாது. ஒப்பந்த முடிவு தேதியும் எனக்கு தெரியாது.

5. எதிர்மனுதாரர் எந்த தேதியில் கடைக்கு வாடகைக்கு வந்தார் என்று எனக்கு தெரியாது. தற்போது RDS Jewellery ஆக செயற்படும் எனது கடைக்கு தெற்கு திசையில் லாரன்ஸ் சாலை உள்ளது என்றால் சரிதான். மேற்படி சாலையில் உள்ள பெரும்பாலான கடைகள் கடலூர் பாடலீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது கடை லாரன்ஸ் சாலை முகப்பில் உள்ளது. எனது கடை மேற்படி கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல.

6. 1975ம் ஆண்டு எனக்கு 11 வயது ஆகும். அப்போது நான் 2ம் வகுப்பு பாடலீற்வரர் பள்ளியில் படித்து கொண்டிருந்தேன். மேற்படி பள்ளி கோவில் அமைந்திருக்கும் தெருவில் அமைந்துள்ளது. பள்ளியில் இருந்து எனது கடை சுமார் 500 மீட்டர் தொலைவில் உள்ளது. எனது வீடு சுப்பராய செட்டி தெருவில் உள்ளது. மேற்ப்டி தெரு கோவிலுக்கு தெற்கு திசையில் 2 தெரு தள்ளி உள்ளது என்றால் சரிதான். 1973 ஆண்டில் எனது தாயார் எங்கள் கடையை கிரையம் பெற்றார். அந்த சமயத்தில் ஓடு போட்ட கட்டிடம் இருந்தது. மேற்படி கிரைய பத்திரம் எதுபும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. அந்த காலத்தில் இருந்தே எனது தாயார் கடையில் நகை கடை நடத்தி வந்தார். எனது தாயார் 15 ஆண்டுகளுக்கு முன்பு என் பெயரில் எழுதி வைத்த பத்திரம் எதுவும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை. 1973ம் ஆண்டிலிருந்து தற்போது வரை மேற்படி கடையில் எனது தாயாரோ ,நானோ தாமோதரன் என்பவரோ நகை கடை நடத்தி வருவதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்க்ல் செய்யவில்லை. அழகப்பா மற்றும் துரைராஜ் என்னை கலந்து ஆலோசித்து ஏதும் செயல்கள் செய்வார்களா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் 1975 ஆம் ஆண்டில் ஓட்டு கட்டிடங்கள் இடிக்கப்பட்டு தளம் போட்ட வீடு கட்டடப்பட்டள்ளதாக சொல்லியுள்ளேன். மேற்படி அவ்வாறு கட்டிடம் இடித்து கட்டடப்பட்ட விவரம் எதுவும் நேரடியாக தெரியாது. மேற்படி விவரம் எனது தகப்பனார் என்னிடம் 1975ம் ஆண்டு கூறினார். அப்போது அழகப்பா மற்றும் துரைராஜ் இருவரையும் எனக்கு நன்கு தெரியும். அவர்கள் என்ன வியாபாரம் செய்தார்கள் என்றும் எனக்கு தெரியும். அவர்கள் கட்டிடத்தை இடித்து கட்டிடம் கட்டியதை நான் நேரில் பார்த்துள்ளேன். யாரை வைத்து கட்டிடம் இடிக்கப்பட்டது மற்றும் எந்த

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.24 14:25:44 +0530

தேதியில் இடிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. கட்டிடத்தின் மேலே தாராய் கட்டைகள் பொருத்தி கட்டுவது தான் மெட்ராஸ் டெரஸ் என்றால் சரிதான். RCC கட்டிடம் என்றால் தளத்தில் கம்பி கட்டி சிமெண்ட் ஜல்லி போட்டு கட்டுவது தான் என்றால் சரிதான். எவ்வளவு செலவு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் அழகப்பா மற்றும் துரைராஜ் இருவரும் செலவுகளை சரிசமமாக பகிர்ந்து கொண்டார்கள் என்று நான் சொல்லியுள்ளேன். ஆனால் அதுபற்றி ஆவணங்கள் எதுவும் நான் பார்த்ததில்லை.

7. 6 மாதத்திற்கு முன்பு கடை எண் 13 மற்றும் 14 கடை உள்ளே சென்றேன். என்னிடம் காட்டப்படும் எதிர்மனுதாரார் சான்றாவணம் 3 தான் மனுசொத்து என்றால் சரிதான். இன்று வரை மனுசொத்து மெட்ராஸ் டெரஸ் போடப்பட்ட நிலையில் தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் எதிர்மனுதாரர் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. ஆனால் எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிர் மனுதாரர் தாக்கல் செய்துள்ளதாக சொல்லப்படும் ஆவணங்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. வழக்கு பற்றியும் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் RCC கட்டிடம் இன்றுவரை இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 2 ல் 1998 ல் முதல் தளம் அமைத்து புதியதாக RCC கட்டிடம் அமைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது, ஆனால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. மனுதாரர் வழக்கில் என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்றும் எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் சொல்ல்ப்பட்டுள்ள மனுதாரர் சான்றாவணம் 11 பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஏற்கனவே அசல் வழக்கு எண் 32/2023 ல் 1902ம் வருடத்திய வாடகை ஒப்பந்தம் என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் வழக்கு சொத்து கல் கட்டுகோப்பு கடைகளாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆரம்பம் முதலே மனுசொத்தில் மனுதாரர்களுக்கு சொந்தமாக கல் கட்டிடம் தான் இருந்தது என்றாலும் மேற்படி மனுசொத்தில் அழகப்பா மற்றும் துரைராஜ் யாரும் எந்த கட்டிட சீரமைப்பும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து அருகே எனக்கு எந்த கடையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் எனக்கு என் கடையின் பக்கத்து கடைகாரர் என்ற வகையில் எனக்கு தெரியும் அவர் மனுசொத்தில் நகை கடை நடத்தி வருகிறார்.

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.24 14:25:51 +0530

9. நான் 6 மாதங்களுக்கு முன்பு மனுசொத்து கடைக்கு சென்றபோது 2 கடைகளுக்கு நடுவே சுவர் இருந்தது என்றால் சரிதான் அந்த சுவற்றை எதிர்மனுதாரர் தற்போது இடித்துவிட்டு இரு கடைகளையும் ஒன்றாக்கிவிட்டார் என்றால் சரிதான். அவர் இடித்த சமயத்தில் எனக்கு அது தெரியாது. தற்போது மனுதாரம் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு இடையே வாடகை ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. எதிர் மனுதாரர் கடையில் நகை வேலை செய்யும் ஆட்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். நான் எதிர்மனுதாரர் கடைக்கு வேலைக்கு சென்றதில்லை. நான் எதிர்மனுதாரர் கடையில் வேலை பார்த்து பயன் பெற்றதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பற்றியும் வழக்கு சொத்து பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

10. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் என்ன சொல்லியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

M.RAJAKUMARESAN Digitally signed by M.RAJAKUMARESAN Date: 2026.03.24 14:25:57 +0530